செ.வெ.எண் -02 நாள்: 01.10.2018

# பத்திரிக்கைச் செய்தி

அனைவருக்கும் கல்வி இயக்கம் மூலம் அரியலூர் மாவட்டத்திலுள்ள 6 ஒன்றியங்களுக்குட்பட்ட பள்ளிகளில் பயிலும் 6 முதல் 18 வயது வரையுள்ள மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான மருத்துவ முகாம் அக்டோபர் 05 முதல் 12ம் தேதி வரை நடைபெற உள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் 6 ஒன்றியங்களில் உள்ள தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி. உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான மருத்துவ முகாம் அரியலூர் ஒன்றியத்திற்கு 05.10.2018 அன்று அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளியிலும், செந்துறை ஒன்றியத்திற்கு 08.10.2018 அன்று செந்துறை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியிலும், ஆண்டிமடம் ஒன்றியத்திற்கு 09.10.2018 அன்று ஆண்டிமடம் அரசு மேல்நிலைப்பள்ளியிலும், தா.பழூர் ஒன்றியத்திற்கு 10.10.2018 அன்று தா.பழூர் அரசு மேல்நிலைப்பள்ளியலும், திருமானூர் ஒன்றியத்திற்கு 11.10.2018 அன்று திருமானூர் அரசு மேல்நிலைப்பள்ளியிலும், ஜெயங்கொண்டம் ஒன்றியத்திற்கு 12.10.2018 அன்று ஜெயங்கொண்டம் அரசு மேல்நிலைப்பள்ளியிலும் நடைபெற உள்ளது.

இம்மருத்துவ முகாமில் சிறப்பு மருத்துவர்களாக எலும்பு முறிவு சிகிச்சை மருத்துவர், மனநல மருத்துவர், காது மூக்கு தொண்டை மருத்துவர், கண் மருத்துவர் மற்றும் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டு தேசிய அடையாள அட்டை, உதவி உபகரணங்கள் மற்றும் அறுவை சிகிச்சை தேவைப்படும் மாற்றுத்திறனாளி மாணவர்களை கண்டறிந்து தேர்வு செய்யவுள்ளனர்.

எனவே, தேசிய அடையாள அட்டை, உதவி உபகரணங்கள் தேவைப்படும் மாற்றுத்திறனாளி மாணவர்கள் தங்களுடைய குடும்ப அட்டை நகல் அல்லது புதிய குடும்ப அட்டை (Smart Card) நகல், ஆதார் அட்டை நகல் மற்றும் ஊனம் தெரியும்படியான பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம்-4 ஆகியவற்றுடன் இம்முகாமில் கலந்து கொண்டு பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**